
பாடம் 4

# சத்தம் இல்லாத யுத்தம்

***நீ அமைதியாகத் தூங்கமுடியாதபடிக்குப் பரபரப்பாக இருந்த நாள் எதுவும் உண்டா? மிகுந்த ஆர்வத்துடன் எப்போது விடியும் என நீ தவித்த நேரம் உண்டா? முதன்முறை எரிகோவைச் சுற்றி வந்த இஸ்ரவேல் இராணுவத்தினருக்கும் அப்படித்தான் இருந்தது. என்னவெனப் பார்ப்போமா?***

அன்றைக்கு அதிகாலையிலேயே இஸ்ரவேலர்கள் விழித்துக்கொண்டார்கள். தேவனைத் துதித்து நன்றி சொல்லியபடி எழுந்தார்கள்.

காலைக்கடன்களை வேக வேகமாக முடித்து, அவசர அவசரமாகச் சாப்பிட்டனர். யுத்தத்திற்கான ஆடைகளை உடுத்தினர். விரைந்து சென்று ஆசாரியர்களின் பின் வரிசையாய் நின்றார்கள். அழகிய வெள்ளை அங்கிகளை அணிந்திருந்த நான்கு



ஆசாரியர்கள் தங்கள் தோள்களின்மேலே கர்த்தரின் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்தவர்களாய்ப் புறப்பட ஆயத்தமாக நின்றார்கள்.

இஸ்ரவேலருடைய தலைவராகிய யோசுவா தம் மக்களை உற்சாகப்படுத்தும்படி அப்போது அங்கே வந்தார்.

இராணுவத்தின் ஒரு சிறிய பகுதியினர்மட்டும் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அவர்களுக்குப் பின்னாக, தொனிக்கும் ஏழு எக்காளங்களைப் பிடித்திருக்கிற ஏழு ஆசாரியர்கள் நின்றார்கள். அவர்களுக்குப் பின்னாக கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் நால்வர் நின்றார்கள். அதற்குப் பின்னாக இராணுவத்தில் மீதமுள்ளவர்கள் நின்றனர். ஆசாரியர்களையும் யோசுவா வரிசைப்டுத்தினார்.

அதன்பின் அவர்களிடம், “இந்த வரிசையின்படியே நீங்கள் செல்லவேண்டும். ஒவ்வொரு நாளும் பட்டணத்தை ஒருமுறை சுற்றிவரவேண்டும். ஏழாம் நாளில் மட்டுமே ஏழு முறை சுற்றிவரவேண்டும்”

## மனன வசனம்

**சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது.**
**சங்கீதம் 133:1.**

என்றார்.

மேலும் ஜனங்களைப் பார்த்து, "நான் சொல்லும் நாள் மட்டும் நீங்கள் ஆர்ப்பரியாமலும், உங்கள் வாயினால் சத்தங் காட்டாமலும் இருங்கள். உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்படவேண்டாம்; ஆர்ப்பரியுங்கள் என்று நான் சொல்லும் நாளிலே ஆர்ப்பரிப்பீர்களாக" என்று கட்டளையிட்டார். ஜனங்களும் சம்மதித்தார்கள்.

அப்படியே ஏழு ஆசாரியர்களும் எக்காளங்களை ஊதிக் கொண்டே கர்த்தரின் பெட்டிக்கு முன்னே நடந்தார்கள். அவர்களுக்கு முன்னே இராணுவ வீரர்களின் ஒரு சிறு கூட்டம் சென்றது. ஆசாரியர்களின் பின்னாலே கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை ஆசாரியர்கள் சுமந்து சென்றார்கள். அவர்களுக்குப் பின் மீதமுள்ள இராணுவம் சென்றது.

எரிகோவை நெருங்கிய போது அதன் மிகப்பெரிய கோட்டைக்கதவுகள் 'சிக்' கென பூட்டப்பட்டிருப்பது தெரிந்தது. வளர்த்தியும் பருமனுமான வீரர்கள் கோட்டையின் மேலே ஆயுதங்தாங்கி எரிகோவைத் தாக்குவதற்கு ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தனர். ஆசாரியர்கள் எக்காளம் ஊத இஸ்ரவேலர் பட்டணத்தை ஒருமுறை சுற்றி பின்னர் தங்கள் பாளயத்திற்கு வந்தனர்.

இவர்களது செயல் எரிகோவின் வீரர்களுக்கும் ராஜாவுக்கும், யாவருக்குமே விநோதமாகத் தெரிந்தது. ஆறு நாளும் இப்படியே நடந்தது.

ஏழாம் நாளில் அதிகாலமே கிழக்கு வெளுக்கும்போதே எழுந்தனர். அவ்விதமாக அன்றையதினம் மட்டும்



## செய்தி


**தேவனுடைய குடும்பத்தில் நாம் யாவரும் சேர்ந்து வேலைசெய்யவேண்டும்.**

பட்டணத்தை 7முறை சுற்றிவந்தார்கள். ஏழாம் முறை ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதுகையில் யோசுவா ஜனங்களை நோக்கி, “ஆர்ப்பரியுங்கள்; பட்டணத்தை கர்த்தர் உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்” என்றார். ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் யாவரும் ஆர்ப்பரித்தார்கள்.

அவ்வாறு மகா ஆரவாரத்தோடே முழங்குகையில் அலங்கம் இடிந்துவிழுந்தது. ஜனங்கள் உள்ளேசென்று பட்டணத்தைப் பிடித்தார்கள். தேவனால் வெற்றி பெற்றார்கள்.

என் கண்மணியே! நீயும் வாழ்வில் வெற்றிபெற எப்போதும் தேவனையே சார்ந்திரு. தேவனைச் சார்ந்திருந்தால் வெற்றி நமதே.

***செய்முறை:*** *எரிகோவை வெற்றிகொள்ள, தேவன் சொல்லியபடி யோசுவா செய்தார். குறிப்பாக, இஸ்ரவேலரது இராணுவத்தையும், எக்காளம் ஊதும் ஆசாரியர்களையும் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கும் ஆசாரியர்களையும் வரிசைப்படுத்தி அனுப்பினார். படத்தில் உள்ள வட்டத்தில் எண்களை எழுதி, யோசுவா இஸ்ரவேலரை வரிசைப்படுத்தியதுபோல் படத்தை வரிசைப்படுத்து.*



## புதிர் 4